Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 26-1-1946 தைமீ 13உ { மலர் 16

## மாறுதலுக்கு ஒத்துவராதவன் மானமுடன் வாழமுடியாது

462.

[13-1-36ல் சென்னை பச்சையப்பன் கல்லூரி பெரிய மண்டபத்தில் நடந்த தமிழ் திருநாளில் பெரியார் ஈ. வெ. ரா. பேசியது]

★

தமிழ் பாஷைக்கு வாழ்த்துக் கூறும் வேலை இலேசானதல்ல. அதிலும் என்போன்ற அதாவது தமிழ் பாஷைக்கு வல்லின இடையின எழுத்துபேதமும், பிரயோகமும் பாஷையின் இலக்கண இலக்கியமும் அறியாதவனும், தமிழ் பாஷையையே கெடுத்து கொலை செய்து வருபவன் என்கின்ற பழியைப் பெற்றவனுமான நான் தமிழ் வாழ்த்துக்குத் தகுதிஉடையவனாவேனா என்று பாருங்கள்.

அன்றியும் தமிழைப்பற்றி அபிப்பிராயங்களிலும் பண்டிதர்களுக்கும் எனக்கும் எவ்வளவோ துறையில் நேர்மாறான கருத்துக்கள் இருந்துவருவதும் எவரும் அறியாததல்ல.

இவைகள் எல்லாம் ஒருபுறம் இருந்தாலும் வாழ்த்துதல் என்பதையும் நான் இவ்வளவு சாதாரணமாய்க் கருதுபவனுமல்ல. வாழ்த்துதல் என்றால் பார்ப்பனர்கள் ஏதோ மஞ்சளையும் அரிசியையும் கலந்து பொறுப்பும் பொருளும் இல்லாத ஒன்றின் பெயரைச் சொல்லி வாழ்த்தி (ஆசீர்வாதம் செய்து)விட்டு ஏதோ பெற்று வயிறு வளர்ப்பதுமாதிரி வாழ்த்தை அவ்வளவு ஏமாற்றமாக நினைப்பவன் அல்ல. ஆனால் வாழ்த்துதலின் அவசியத்தையும், அதன் பெருமையையும் நான் உணர்ந்தவனேயாவேன். தகுதியும் பொறுப்பும் உடையவர்களே வாழ்த்தவேண்டும். வாழ்த்தப்பவர்கள் தங்களுக்கு பொறுப்பு இருப்பதை உணர்ந்தவர்களாகயிருக்க வேண்டும். தமிழுக்கு இடுக்கண் ஏற்படும்போது கவலை அற்றவரும் எவ்வித உதவியும், ஆதரவும் அளிக்கத் தகுதிஅற்றவர்களும் வாழ்த்திப் பயன் என்ன?

தமிழில் எந்த அளவும் பள்ளியில் பயின்றனவல்ல. தமிழைப் பற்றி தமிழ்மக்கள் நலம், தமிழ் மக்கள் தன்மதிப்பு என்பதல்லாமல் வெறும் பாஷையைப்பற்றியே நான் எவ்விதபிடிவாதம் கொண்டவனுமல்ல.

முதலாவதாக தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்கவேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்துவிட வேண்டும். தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளிவைக்க வேண்டும்.

மதசம்மந்தமற்ற ஒருவனுக்கு தமிழில் இலக்கியம் காண்பது மிக மிக அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணம்கூட மதத்தோடு பொருத்தப்பட்டே இருக்கிறது.

உதாரணமாக "மக்கள் தேவர் நரகர் உயர்திணை,' என்றால் என்ன? நரகர்கள் யார்? தேவர்கள் யார்? இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சி தானே இது?

இனி பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குத் தமிழ் இலக்கியத்துக்குப் புத்தகங்கள் எவை? கம்பராமாயணம், பாரதம், பாகவதம், பெரியபுராணம், தேவாரம், திருவாய்மொழி போன்ற மத தத்துவங்களையும், ஆரியமத தத்துவம் என்னும் ஒரு தனிப்பட்ட வகுப்பின் உயர்வைப் போதித்து மக்களை மானமற்றவர்களாக்கும் ஆபாசக்களஞ்சியங்களும் அல்லாமல் வேறு இலக்கியங்கள் மிதந்து காணப்படுகின்றனவா? இன்றையப் பண்டிதர்களுக்கு உலக ஞானத்தைவிடப் புராண ஞானங்கள் தானே அதிகமாயிருக்கின்றன?

மேல்நாட்டுப் புலவர்கள், மேல்நாட்டு இலக்கியங்கள் ஆகியவைகளுக்கு இருக்கும் பெருமையும், அறிவும் நம் தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கின்றது என்று சொல்ல முடியுமா? ஷேக்ஸ்பியர் வேண்டுமா? இங்கிலாந்து வேண்டுமா? என்றால் இங்கிலீஷ் மகன் ஷேக்ஸ்பியர் வேண்டும் என்பானாம். நாம் எதைக் கேட்பது?

இந்தியா வேண்டுமமா? கம்பராமாயணம் வேண்டுமா? என்றால் உண்மைத் தமிழ்மகன் என்ன சொல்லுவான்? இரண்டு சனியனும் வேண்டாம் என்றுதானே சொல்லுவான்.

மேல்நாட்டில்தான் அறிவாளிகள் உண்டு என்றும், கீழ்நாட்டில் அறிவாளிகள் இல்லை என்றும் நான் சொல்ல வரவில்லை.

மேல்நாட்டு அறிவாளிகள் தாங்கள் செய்த இலக்கியங்களை மத சம்மந்தமன்னியில் பெரிதும் செய்து வைத்தார்கள். அதனால் நூற்றுக்கணக்காக மேல்நாட்டு இலக்கியங்களும் பண்டிதர்களும் போற்றப்படுகிறார்கள்.

கீழ்நாட்டில் குறிப்பாக இந்தியாவில் எத்தனை இலக்கியம் எத்தனை பண்டிதர்கள் [illegible]

போற்றப்படுகிறார்கள்? தாகூர் அவர்கள் கவிக்குஆக போற்றப்படலாம், ஆகவே மதம் கடவுள் சம்மந்தமற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை ஞானத்தைப்பற்றிய இலக்கியம், யாவரும் மறுக்கமுடியாத விஞ்ஞானத்தைப்பற்றிய இலக்கியம் ஆகியவைகள் மூலம் தான் ஒரு பாஷையும் அதன் இலக்கியங்களும் மேன்மையடைய முடியும் என்பது மாத்திரமல்லாமல் அதைக் கையாளும் மக்களும் ஞானமுடையவர்களாவார்கள்.

கம்பராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இருந்து என்ன பயன். ஒருவன் எவ்வளவுதான் பட்டினி கிடந்தாலும் மலத்தில்இருந்து அரிசி பொறுக்குவானா? அது போல்தானே கம்பராமாயண இலக்கியம் இருக்கிறது. அது தமிழ் மக்களை எவ்வளவு இழிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழரின் சரித்திரகால எதிரிகளை எவ்வளவு மேன்மையாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுயமரியாதையை விரும்புகிறவன் எப்படி கம்பராமாயண இலக்கியத்தை படிப்பான். இன்று கம்பராமாயணத்தால் தமிழ் மக்களுக்கு இலக்கியம் பரவிற்றா இழிவு பரவிற்றா என்று நடுநிலையில் இருந்து யோசித்துப் பாருங்கள்.

தமிழ் பாஷையின் பெருமை பரமசிவனுடைய டமாரத்திலிருந்து வந்ததென்றோ, பரமசிவன் பார்வதியிடம் பேசிய பாஷை என்றோ, சொல்லிவிடுவதாலும் தொண்டர் நாதனை தூதிடைவிடுத்ததாலும், முதலை உண்ட பாலனை அழைத்ததாலும், எலும்பை பெண்ணாக்கினதாலும், மறைக்கதவைத் திறந்ததாலும் தமிழ் மேன்மையுற்றதாகி விடாது. இந்த ஆபாசக்கதைகள் தமிழ் வளர்ச்சியையும் மேன்மையையும் குறைக்கத்தான் பயன்படும்.

பரமசிவனுக்குகந்த பாஷை தமிழ் என்றால் வைணவனும் அருக்கனும் தமிழைப் படிப்பதே பாவமல்லவா? அன்றியும் அந்தப் படியிருந்தால் பார்ப்பான் தமிழ் மொழியை சூத்திர பாஷை என்றும், அதைக் காதில் கேட்பதே பாவம் என்றும் சொல்லுவானா? என்று யோசித்துப்பாருங்கள்.

இன்று தமிழ்நாட்டில் வந்து தமிழ் கற்று வயிறு வளர்ப்பவர்களாகிய பார்ப்பனர்களே இந்தி பாஷை இந்தியபாஷை ஆகவேண்டுமென்று முயற்சித்து வருகிறார்கள். கோர்ட் பாஷை, அரசாங்க பாஷை ஆகியவை எல்லாம் இந்திமயமாகவேண்டும் என்கிறார்கள். காரணம் கேட்டால் இந்திபாஷையில் துளசிதாஸ் ராமாயணம் நன்றாய் விளங்குமென்றார்கள்.

தமிழ்ப் பண்டிதர்களுக்கு இதைப்பற்றிச் சிறிதும் கவலை இருந்தது என்று சொல்ல முடியவில்லை; தமிழ்ப்பண்டிதர்கள் இந்த அரசியல் வாதிகளின் கூச்சலுக்கும் பார்ப்பனர்கள் ஆதிக்கத்துக்கும் பயந்துகொண்டு வாயை மூடிக்கொண்டு இருக்கிறார்கள்.

பார்ப்பனர்கள் செத்த பாம்பான சமஸ்கிருதத்தை எடுத்து வைத்துக்கொண்டு எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். பொதுப் பணம் சமஸ்கிருதத்தின்பேரால் எவ்வளவு செலவாகின்றது? பொதுஜனங்களின் வரிப்பணம் சமஸ்கிருதத்துக்குஆக ஏன் ஒரு பைசாவாவது செலவாகவேண்டும். தமிழ் மக்கள் யாரும் இதைப்பற்றி கவனிப்பதில்லை. தமிழ் தமிழ் என்று எங்கோ ஒரு மூலையில் இரண்டு பண்டிதர்கள்தான் சத்தம் போடுகிறார்கள். ஆனால் சமஸ்கிருதத்துக்கும் இந்திக்கும் கேபினெட் மெம்பர்கள், ஐகோர்ட் ஜட்ஜிகள் முதல் எல்லா பார்ப்பன அதிகாரிகளும் பாடுபடுகிறார்கள். நம்ம பெரிய அதிகாரிகளுக்கோ, பெரிய செல்வாக்கும் செல்வமும் உள்ளவர்களுக்கோ தமிழைப்பற்றி கவலையும் இல்லை; தமிழைப்பற்றி அதிகம்பேருக்கு ஒன்றும் தெரியவும் தெரியாது.

தமிழினிடத்தில் ஒருவன் அபிமானியாக இருந்தாலே அவன் தேசத்துரோகி, வகுப்புவாதி, பிராமணத்துவேஷி என்றெல்லாம் ஆய்விடுகிறான். தமிழின் பரிதாப நிலைக்கு இதைவிட வேறு என்னவேண்டும். தமிழ் பாஷையில், எழுத்தில் ஒரு சிறு மாற்றமோ முற்போக்கோ செய்யக்கூட ஒரு தமிழ் அபிமானியும் முயற்சிப்பதில்லை. யாராவது முயற்சித்தாலும் ஆதரவளிப்பதுமில்லை. தற்கால நிலைக்கு தமிழ் போதியதாகவும், சௌகரியமுள்ளதாகவும் ஆக்க யார் முயற்சித்தார்கள்.

மேல்நாட்டு பாஷைகள் எவ்வளவு மாற்றமடைந்து வருகின்றன. எழுத்துக்களில் எவ்வளவு மாறுதல் செய்து வருகிறார்கள். ரஷ்யாவில் சில பழைய எழுத்துக்களை எடுத்துவிட்டார்கள். புதிய எழுத்துக்கள் சேர்த்தார்கள். அமெரிக்காவில் எழுத்துக்கூட்டுவதாகிய இஸ்பெல்லிங் (Spelling) முறையை மாற்றிவிட்டார்கள். துருக்கியில் துருக்கிபாஷைக்கு உண்டான எழுத்துக்களையே அடியோடு எடுத்துவிட்டு ஆங்கில எழுத்துக்களை யேற்படுத்திக்கொண்டார்கள். தமிழர்கள் தமிழுக்காக நமக்கு விவரம் தெரிந்த காலமாய் என்ன காரியம் செய்தார்கள்? காலத்துக்கு ஏற்ற மாறுதலுக்கு ஒத்துவராதவன் மானமுடன் வாழ முடியாது; மாறுதலுக்கு மனிதன் ஆயத்தமாக இருக்க வேண்டும். முன்னேற்றம் என்பதே மாறுதல் என்பதை உணர்ந்த மனிதனே உலகப்போட்டிக்கு தகுதியுடையவனாவான்.

தமிழ் எழுத்துக்களில் ஒருசில மாற்றம் செய்தேன். அநேக பண்டிதர்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னைப் பாராட்டினார்களே யல்லாமல் ஒருவராவது அம்முயற்சிக்கு ஆதரவளித்தவர்கள் அல்ல.

இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆனால் தகுதி உள்ளவர்கள் எவரும் வெளிவராவிட்டால் நான் என் செய்வது? என்னைக்குறை கூறவோ திருத்தவோ, முயற்சிப்பதின் மூலமாகவாவது இதற்கு ஒரு வழி பிறக்காதா என்றுதான் துணிந்தேன். இதுவரை யாரும் அதை லட்சியம் செய்யவில்லை.

எப்படி ஆனாலும் தமிழ்பாஷை உணர்ச்சி தமிழ் மக்களுக்கு இன்றியமையாதது, அதனமூலம் தமிழ் மக்கள் ஒன்றுசேர வசதியுண்டு. இத்திருநாளை ஓழிந்தநேரத் திருநாளாக இல்லாமல் தமிழ் மக்களுக்கு ஒரு புது எழுச்சியையும் ஊக்கத்தையும், உண்டாக்கும் திருநாளாகச் செய்யவேண்டும். வருஷம் ஒவ்வொரு ஊரில் தலைமைத் திருநாள் நடைபெறச்செய்ய

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

★

20-1-46 ஞாயிறு காலை 9-மணிக்கு திருச்சி டவுன்ஹால் மாளிகையில் நடைபெற்ற சென்னை மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்திற்குப் பலஜில்லாக்களிலிருந்து வந்திருந்த அங்கத்தினர்கள் வருமாறு:—

திருநெல்வேலி தோழர்கள்:—
க. மு. பிரமநாயகம்,
சொ. நீதிமாணிக்கம்

ராமநாதபுரம் தோழர்கள்:—
எஸ். எஸ். பழனிச்சாமி
வக்கீல் கே. ராஜசேகரன்

மதுரைத் தோழர்:—
இ. சுக்குணி

திருச்சித் தோழர்கள்:—
தி. பொ. வேதாசலம்
ஜி. பராங்குசம்
என். சங்கரன்
எ. சின்னத்துரை அம்பலம்

கோவைத் தோழர்கள்:—
ஈ. வெ. ராமசாமி
ஈ. வெ. கி. சம்பத்

வடஆற்காடு தோழர்கள்:—
சித்தாரெட்டி
க. அ. மணி

சென்னைத் தோழர்கள்:—
கே. கோவிந்தசாமி
என். எம். சுப்ரமணியம்

தென்ஆற்காடு தோழர்கள்:—
அ. திராவிடமணி
சி. முனிசாமி

தஞ்சைத் தோழர்கள்:—
கே. கே. நீலமேகம்
வி. சின்னத்தம்பி
ரங்கராஜ்

தோழர் வேதாசலம் அவர்கள் தலைமை தாங்கியவுடன் பார்லிமென்டரி தூது கோஷ்டி விஷயமாக நமது கட்சியின்போக்கு என்ன என்பது பற்றி முதலில் விவாதிக்கப்பட்டது. கடைசியாகப்பெரியார் அக்கோஷ்டியார் விஷயமாயும் அவர்கள் நடவடிக்கை விஷயமாயும் தனக்கு ஒன்றும் ஆர்வம் இல்லை என்றும், ஆகையால் அவர்களாக இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசியல் சமுதாய இயல்கட்சியாரிடம் நெருங்கி விஷயம் தெரிந்துகொள்ள கவலை எடுத்துக் கொள்வார்களேயானால் அப்பொழுது வேண்டுமானால் நம் நிலையைப்பற்றி யோசிக்கலாம் என்றும், அம்மாதிரியான நடுநிலைமை கவலை அவர்கட்கு இருப்பதாய்த் தெரியவில்லை என்றும் ஆதலால் நாம் அதைப்பற்றி ஒன்றும் யோசிக்க வேண்டியதில்லை என்றும் சொன்னார். அதன்பேரில் பெரியார் அவர்களும், தோழர்கள் வேதாசலம், அண்ணாதுரை அவர்களும் அவசியம் என்று கருதினால் அதைப்பற்றிய நடவடிக்கைகளுக்கும், பேச்சுவார்த்தைகட்கும் முழு அதிகாரமும் உரிமையும் கொடுக்கப்பட்டு அவ்விஷயம் முடிவுற்றது.

பத்திரிகை:—

விடுதலைப் பத்திரிகை இப்போது பெரியார் கைவசம் வந்துவிட்டதால் அதை அவர் 'தினசரியாகக் கட்சிக்காக நடத்த வேண்டிக்கொள்ளப்பட்டதோடு அதற்காக ஏற்படும் நட்டத்திற்கு மாதம் 700 ரூபாய்க்கு அதிகப்படாமல் நட்ட மேற்பட்டு வரும்வரையில் மாத்திரம் பணஉதவி கட்சி நிதியிலிருந்து உதவுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

அங்கத்தினர்கள்:—

பிப்ரவரி மாதத்தில் அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலை துவக்கப்படவேண்டும் என்றும், ஜில்லாவுக்குப் பத்தாயிரம் (10000) அங்கத்தினர்களாவது உடனே சேர்க்க வேண்டும் என்றும், நிர்வாக அங்கத்தினர்கள் இது விஷயத்தில் கூடுமான முயற்சி எடுத்துஉதவவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நிதி திரட்டல்:—

நிதி திரட்டுவதற்கு நிதிக்கமிட்டி என்பதாக ஒரு கட்டி அமைக்கப்பட்டது:

பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைவர். தோழர்கள் கே. கே. நீலமேகம், பி. ஆர். பொன்னுசாமி, இ. சுக்குணி, கே. ஜெகதீசன் ஆகியவர்கள் நிதிக்கமிட்டி அங்கத்தினர்களாவார்கள்.

ஒரு அமைச்சரையும், ஒரு அங்கத்தினரையும் கோவாப்ரேட்செய்து கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டது.

கிருஷ்ணன்—பாகவதர்:—

தோழர்கள் கிருஷ்ணன், பாகவதர் ஆகியவர்கள் விடுதலைபற்றி யோசிக்கப்பட்டது. விடுதலையைக்கோரி தமிழ்நாடு ஸ்தலஸ்தாபனங்களும், மற்ற சங்கங்களும், தனிப்பட்ட பிரமுகர்களும் செய்துவரும் முயற்சிகளைப் பாராட்டுவதோடு, மற்ற சபைகளும், பெரியோர்களும் இதே முயற்சியை மேற்கொண்டும், மற்றும் ஆவனவற்றையும் செய்யவேண்டுமென்று இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது என்பதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் இன்று 20ந் தேதி இதுவிஷயமாய் சென்னையில்கூடும் பொதுமக்கள் கூட்டத் தீர்மானங்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பு அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

## திராவிட மாணவர் மாகாண மாநாடு

9, 10-2-46ல் (சனி ஞாயிறுகளில்) நீடாமங்கலத்தில் நடைபெறும். மாநாட்டிற்குப்பேரறிஞர்கள் வரதராஜன், சோமசுந்தர பாரதியார், பெரியார் ஈ. வெ. ரா. தளபதி சி. என். அண்ணாதுரை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், ஜனாப் ஹாஜி அப்துல் சத்தார் ஈசாக் சேட், மற்றும் தோழர்கள் வெங்கடாத்திரி, அன்பழகன், நெடுஞ்செழியன், ஜனார்த்தனம், திருமதி சம்பந்தம், ஜீவா, லாரன்ஸ் மற்றும் பலர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தயவுசெய்து மாநாடு வசூல்செய்வோர் விரைந்து செய்து தங்கள் நன்கொடையை இன்னும் நான்கு நாட்களுக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இடம், காலம் குறித்து விளம்பரம் சீக்கிரமே தினசரிகளில் வெளிவரும்.

---

## விருந்து

14-1-46ல் பெரியகுளத்திற்குப் பெரியார் சென்றபொழுது வடகரை மிராசுதார் தோழர் ராமையா நாயுடு அவர்கள் இரண்டுநாட்களும் விருந்தளித்தார்கள். பெரியார் தங்கியிருப்பதற்குத் தன் பங்களாவில் வசதிசெய்து கொடுத்தார்.

---

# கருணை காட்டுக!

(கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்ற கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டங்களில் தமிழ்மணிகள், நகைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன், இசை உலக ஒளி M. K. தியாகராச பாகவதர் இருவரையும் கருணை காட்டிவிடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.)

o o

26-12-46ல் கண்டியூரில் திராவிடர் கழக ஆதரவில் தோழர் கோ. ஆளவந்தார் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டம்.

o o

14-1-46ல் சென்னை மயிலை திராவிடர் கழக, ஆதரவில் தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் நடந்த பொங்கல் விழா.

o o

14-1-46ல் நாமக்கல்லில் நடந்த திராவிடர் கழகக்கூட்டம்.

o o

21-1-46ல் தாத்தையங்கார்பேட்டை திராவிட வாலிபர் கழகக் கூட்டம்.

o o

கொழும்பு தோட்டப்பகுதி ஆதித்தமிழர் இந்திய வாலிபர் சங்க சார்பில் 11-1-46ல் தோழர் என். பி. சின்னையா தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

o o

3-1-46ல் கரூர் மருத்துவர் சங்கத்தில் தோழர் எ. முத்துசாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டம்.

o o

மண்டபம்கேம்பு அண்ணாதுரை பகுத்தறிவுக்கழக 16-1-46ம்நாள் கூட்டம்.

o o

14-1-46ல் நடந்த மயிலை திராவிடர் கழகத் தமிழ்த்திருநாள் கூட்டம்.

o o

தூத்துக்குடி 28-12-45ல் தோழர் பழனி தலைமையில் இந்திய நட்சத்திர் கால் பந்தாட்டக்கழக அங்கத்தினர் கூட்டம்.

o o

1-1-46ல் நடந்த சென்னை நுங்கம் பாக்கம் திராவிடர் கழக்கூட்டம்.

o o

31-12-45ல் கல்லிடைக்குரிச்சி விஸ்வகர்ம மஹாஜன சங்கக்கூட்டம்,

o o

தூத்துக்குடி நகர திராவிடர் கழக சார்பில் 25-12-45ல் தோழர் எ. வேலாயுதம் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

கோடம்பாக்கம் ரேஷனாலிஸ்ட் ரெக்ரியேஷன் கிளப் 30-12-45ல் தோழர் எம். சுப்பிரமணியம் தலைமையில் நடந்த ஆண்டுவிழா.

ரோஜா முத்தையா

o o

சீனிவாசநல்லூர் முத்துராஜ மாகாஜன சங்க 5-12-46ம்நாள் தோழர் வி, முத்துவீர முத்துராஜா தலைமையில் நடந்த கூட்டம்.

o o

31-11-45ல் தோழர் கே. எஸ். கருப்பசாமி ஆச்சாரி தலைமையில் நடந்த மலையாண்டி பட்டிணம் விஸ்வகர்ம மகாஜன சங்கக்கூட்டம்.

o o

30-12-45ல் தோழர் வி. எ. தேவசகாயம் தலைமையில் நடகத வடக்கன்குளம் ஆச்சாரி சமூக முன்னேற்ற சங்கக்கூட்டம்.

o o

இராசிபுரம் திராவிடர் கழக இலவச வாசகசாலையின் நிர்வாகக்குழுக் கூட்டம்.

o o

16-1-46ல் தோழர் ஒய். எஸ். அருணாசலம் தலைமையில் மல்லியக்கரையில் நடந்த பொதுக்கூட்டம்.

o o

14-1-46ல் அண்ணாமலை நகரில் தோழர் சி. தியாகராசன் தலைமையில் நடந்த கூட்டம்.

o o

## வரி வசூலா?

சில இடங்களில் தோழர் வாரியாருக்காகக் கட்டாயவசூல், நடத்தக்கூடாதவர்களால் மறைமுகமாகவும், நேர்முகமாகவும் வசூலிப்பதாய்ச் செய்திகள் பல வந்துள்ளன.

23-1-46ல் நடந்த இராஜபாளையம் முனிசிபல் கவுன்சில் கூட்டத்தில் தோழர்கள் கிருஷ்ணன்—பாகவதர் ஆகியோரை கருணை காட்டி விடுதலை செய்ய வேண்டுமென்ற தீர்மானம் தோழர் ஆர். பி. ஆதிநாராயணனால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

★


16-1-46ல் தோழர் ஜி. ராமானுஜ முதலியார் தலைமையில் நடந்த திருவாரூர் நகரசபைக்கூட்டத்தில் தோழர்கள் கிருஷ்ணன்—பாகவதர் ஆகியோருக்குக் கருணைகாட்டி விடுதலை செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

★

தோழர்கள் கிருஷ்ணன்—பாகவதர் ஆயுள் தண்டனையடைந்து சிறையிலிருந்து வருவதை ஷியார்களுக்கு கருணைகாட்டி சென்னை மாகாண மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் விடுதலை செய்யவேணுமாய் துறையூர் பஞ்சாயத்துப்போர்டு 28-12-45ந் தேதி கூட்டத்தில் ஏகமனதாகத்தீர்மானித்தது.

★

இராசிபுரம் பஞ்சாயத்துபோர்டு 31-12-45ல் தோழர் மா. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் கிருஷ்ணன்—பாகவதர் இருவரையும் மேன்மைதங்கிய கவர்னர் கருணைகாட்டி விடுதலைசெய்ய வேணுமாய் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

சற்று கவனியுங்கள்

17-1-46ல் ஒரு தோழரிடமிருந்து வந்த கடிதம்

திருவாளர் டாக்டர் ஜெயராம் அவர்களுக்கு
வணக்கம்

தாங்கள் அனுப்பிய காயசுத்தி லேகியம் மலச்சிக்கலை ஒழித்து உடம்புக்கு பத்துணர்ச்சியளிக்கும் அமிர்தம் என்றுதான் கொள்ளுகிறேன். ஒரு சேர் காயசுத்தி லேகியம் அனுப்பி வையுங்கள். நலம்.

வணக்கம்
பூ. ஏ. ம. பழனிசாமி,
து. பருப்பு வியாபாரம், சென்னை.

உடம்புக்கு புத்துணர்ச்சியளிக்கும் உயிர்த் தோழன்

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0.

ஏஜண்டுகளுக்கு விண்ணப்பிக்கவும். விபரத்திற்கு:

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

சோல்ஏஜண்டு:

M. E. அப்துல் ரகிமான் சாகிபு,
புகையிலை வியாபாரம், பெரியகடைவீதி, திருவண்ணாமலை.

## நடக்க இருப்பவை

★26, 27-1-46ந் தேதிகளில் திருநெல்வேலியில் திராவிடர் கழக 3-வது மாவட்ட மாநாடு தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடைபெறும். பெரியார் அவர்களும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

★கரூர்தாலூகா 4-வது திராவிடர் கழக மாநாடு 3-2-46ல் தோழர் பி. ஷண்முகவேலாயுதம் தலைமையில் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா., தளபதி சி. என். அண்ணாதுரை மற்றும் பலர் கலந்து கொள்வார்கள். கறுப்புச்சட்டைப் படைஅணிவகுப்பில் கலந்துகொள்ளும் தோழர்களுக்கு உணவுவசதி செய்யப்பட்டிருக்கிறது.

★27-1-46 காலை சேலம், குகை வர்த்தக குமாஸ்தாக்கள் சங்க ஆண்டுவிழாவில் தளபதி சி. என். அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார். அன்று மாலை விக்டோரியா மைதானத்தில் பொதுக் கூட்டத்திலும், மறுநாள் 28-1-46ல் சேலம் கல்லூரித் தமிழ் மாணவர் கழக சார்பிலும் தளபதி அவர்கள் பேசுவார்கள். வருக!

★வடஆற்காடு ஜில்லா திராவிடர் கழகக் கமிட்டிக்கூட்டம் 1-2-46ல் மாலை 3-மணிக்கு வேலூர் லட்சுமணசாமி டவுன்ஹாலில் நடைபெறும். அன்றுமாலை வித்வான் கே. கோவிந்தன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா. பேசுவார்கள்.

★27-1-46ல் கோவை மாவட்ட சலவைத் தொழிலாளர் மாநாடு ஈரோடு சரஸ்வதி ஹாலில் தோழர் கே. வெங்கலவன் பி. ஏ., தலைமையில் நடைபெறும்.

★3-2-46 மாலை 5-30 மணிக்கு சென்னை வியாசர்பாடி சுந்தர முதலித்தெரு பஜனைக்கோயில் மைதானத்தில் தோழர் எஸ். கஜேந்திரன் தலைமையில் கே. அன்பழகன், என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், கே. கோவிந்தசாமி, சி. தங்கராஜ் சொற்பொழிவாற்றுவார்கள்.

★தென்சென்னை திராவிடர் கழக மாநாடு 10-2-46ல் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், தளபதி சி. என். ஏ. அவர்களும் கலந்துகொள்வார்கள். இடம், தேதி பின் அறிவிக்கப்படும்.

★ 2-2-46 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தஞ்சை திராவிட வாலிபர் கழகச் செயற்குழுவினர் கூட்டம் ஷை சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். செயற்குழுவினர் அனைவரும் வருக.

### கட்டுரை தேவை

சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் "தமிழ் முரசு" இவ்வருட ஆண்டுமலர் வெளியிட இருக்கிறது. அதற்குக் கட்டுரை வரைவோர் விரைவினில் கீழ்க்கண்டமுகவரிக்கு அனுப்பிவைக்கக்கோருகிறார்கள்.

ஆசிரியர், "தமிழ் முரசு"
71, சிலிகிரோடு, சிங்கப்பூர்.

### ஜாதி ஒழிக!

31-12-45ல் நடந்த இராசீபுரம் பஞ்சாயத்துபோர்டு கூட்டத்தில் சிற்றுண்டிசாலைகளில் ஜாதிபேதமின்றி சமநோக்குடன் எல்லோரையும் அனுமதிக்கும்படி ஓட்டல் சொந்தக்காரர்களை கேட்டுக் கொள்வதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

### மனமாற்றம்

காங்கரசில் இருந்து முன் ஒரு வருடம் சிறைத்தண்டனை அனுபவித் தருரிஞ்சிப்பாடித் தோழர் எஸ். பழனியவர்கள் தாம் திராவிடர் கழகத்தில் சேர்ந்துவிட்டதாக அறிவிக்கிறார்.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

25-1-46ந் தேதி பிற்பகல் பெரியார், மணி, தவமணி முதலியவர்கள் ஈரோட்டிலிருந்து திருநெல்வேலி மாநாட்டுக்குப்புறப்பட்டார்கள். 26, 27ந் தேதி திருநெல்வேலி, 1ந்தேதி வேலூர் (வ. ஆ.) 3ந் தேதி புகளூர் (திருச்சி ஜில்லா) சென்றுவிட்டு 4ந்தேதி ஈரோடு திரும்புவார். பின் சென்னை செல்வார்.

### கறுப்புச்சட்டைப்படை சென்னை

சென்னை நகரில் உள்ளவர்கள் "கறுப்புச் சட்டைப் படை" யில் சேர விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் காலை 7 மணி முதல் மாலை 7மணி வரையில் விண்ணப்பச் சீட்டு பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் சி. கணேசன்,
(Captain)
1, டெலிகிராப் ஆபாய் நாயுடுலேன்
"விறகு பங்கீடுகடை"
கொண்டித்தோப்பு, மதராஸ்.

### வசதி தேவை

திருவண்ணாமலை கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு சரியானபடி மருந்து சப்ளை கிடையாதென்றும், மருந்தும் மற்றும் போதிய அளவு ஆட்களும் ஆஸ்பத்திரிக்குத் தேவையென கடிதம் வந்துள்ளது.


ஆம், உங்களுக்கு மகத்தான புதுவருட கொண்டாட்டங்கள்
இருந்தன என்பது நமக்குத் தெரியும். ஆனால்
கடல்கடந்த நாடுகளில் சேவை செய்யும்
துருப்புகளின் நிலை என்ன?

★

**மே. த. கவர்னரின்**

சைன்ய வசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
தாராளமாகப் பணம் கொடுத்துதவுதன் மூலம் அவர்களுக்கு
உண்மையான மகிழ்ச்சி தரக்கூடிய புத்தாண்டை உண்டாக்குவதற்கு
உங்களால்தான் முடியும்.

★

எனவே
ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள்,
கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா
முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு
தயவு செய்து உங்களது பணத்தை அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ஞு ஜனவரிமீ 26-உ

# காந்தியார் வரவு.

## பனியா வேட்டை பார்ப்பனப் பண்டிகை.

சென்னையில் இம்மாதம்கடைசி வாரம் காந்தியார் கண்காட்சி வாரமாக நடைபெறுகிறது. காந்தியாரை சென்னையில் உள்ள வடநாட்டு பனியாக்களான மார்வாடிகளும், குஜராத்திகளும், முல்தானிகளும் தங்கள் குரு வந்ததுபோல் மரியாதையும் ஆடம்பரமும்செய்து கண்காட்சியாக நடத்துகிறார்கள். அதற்குவேண்டிய அளவுக்கு மேலாகவே நம்நாட்டுப் பார்ப்பனர்கள் அவருக்கு விளம்பரம் கொடுத்து, காந்தி அர்ச்சகர்களாக இருந்து மக்களைக்கொண்டு போய் சேர்த்து மயக்கவைக்கிறார்கள்.

சென்னையில் இன்று எங்கு பார்த்தாலும் இதே பேச்சுத்தான் பேசும்படியாகக் கட்டுப்பாடாகப் பார்ப்பனர்கள் கெட்டிகாரத்தனமான பிரசாரமும் காரியமும் செய்கிறார்கள். பார்ப்பனப் பெண்களும், ஆண்களும், பனியா சேட்யார் ஆண்களும், பெண்களும் குழந்தை குட்டிகளுடன் கோவிலுக்குப் போவதுபோல் கூட்டம் கூட்டமாக ஊர்கோலம் செல்லுவதுபோல் வெகு ஆச்சார அனுஷ்டானங்களுடன் நடந்து அவரை விளம்பரம் செய்தவண்ணமிருக்கிறார்கள். இதை சென்னையில் ஒரு உற்சவம் என்றே சொல்லலாம். இவ்வளவு ஆர்ப்பாட்டம் இருந்தாலும் பார்ப்பனர்—பனியா அல்லாத நம் திராவிடமக்கள் இதைப்பற்றி சிறிதும் லக்ஷியம் மதிப்பு இல்லாமல் இருப்பதோடு வாலிபர்களும், மாணவர்களும் இந்த ஜாலவித்தையைப் பார்த்துப் பரிகாசம்செய்து சிரித்த வண்ணம் இருக்கிற காட்சி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிரிப்பதும், பரிகசிப்பதும் மாத்திரமல்லாமல் இது விஷயத்தில் இவ்விரு கூட்டத்தார், அதாவது பனியா—பார்ப்பனர் செய்யும் சூட்சியைப் பச்சையாக இழித்துப் பேசிப்பழித்த வண்ணம் இருப்பது மிகமிகக் குறிப்பிடத்தக்கதாகும்.

காந்தியார் சென்னை நகரத்திற்கு வந்ததும் அவர் பக்கத்தில் இருமருங்கிலும் ஒருபுறம் சர் என். கோபால்சாமி அய்யங்காரும் மறு பக்கம் டாக்டர் சி. ராஜகோபாலாச்சாரியாருமாகிய இரு பார்ப்பனத் தோழர்கள் நெருங்கி அர்ச்சகர்கள்போல் அமர்ந்து கொண்டு மற்றவர்களைக் கிட்ட அணுகவிடாமல் வெகு ஜாக்கிரதையாகப் புறக்கணித்தும் காந்தியாரை வரவேற்கக் காங்கரஸ் தலைவர்கள் என்ற முறையில் ரயிலடிக்குச்சென்ற தோழர்கள் "காமராஜ நாடார் கம்பெனியார்களை" சிறிதும் சட்டை செய்யாமல் விடப்பட்டுவிட்டதையும் பார்த்த தமிழர்கள் அத்தனைபேரும் "வேணும்—வேணும் இந்த மானங்கெட்ட தமிழர்களுக்கு, இதுவும்வேண்டும் இன்னமும் வேண்டும்" என்று சொன்னவண்ணம் பேசிக் கொண்டுபோனதைப் பார்த்தும் கேட்டும் காமராஜ் 'அண்கோ'க்கள் தலைகுனிந்தவண்ணமாய்ப் பின் தொடர்ந்த பரிதாபக்காட்சி மிகமிகக் குறிப்பிடத்தக்கதாகும்.

காந்தியார் இதுசமயம் தமிழ்நாட்டிற்கு வரவழைக்கப்பட்டதின் நோக்கம் முதலாவது தேர்தல் பிரசாரத்துக்கு ஆக, என்பது ஒருபுறமிருந்தாலும், இத்தமிழ்நாட்டில் இதுசமயம் தமிழ்மக்களிடம் இருந்துவரும் மார்வாடிக் கூட்டத்தினர்மீதுள்ள வெறுப்பையும், காங்கரஸ் கோட்டைக்குள் இருந்துவரும் பார்ப்பனர் மீதும், ஆச்சாரியார் கோஷ்டி மீதுமுள்ள வெறுப்பையும் ஒழிப்பதற்கு ஆகவே முக்கியமாய் வரவழைக்கப்பட்டிருக்கிறார் என்பதை சென்னையில் யாவரும் அறிந்துள்ளார்கள்.

காந்தியாரும் இந்த சமயம் இங்கு தேர்தல் பிர்சாரம் தேவை இல்லை என்பதை உணர்ந்து கொண்டதும் மிகக்கெட்டிக்காரத்தனமாக திராவிட கழக செல்வாக்குக்கு எதிராக பஜனை வேலையிலும், பிரார்த்தனை வேலையிலும் இறங்கி பஜனையும், பிரார்த்தனையும் செய்தவண்ணமாகவும், ராம் நாடக் காலட்சேபம் செய்தவண்ணமாகவும் இருந்துவருகிறார்.

அடுத்தாப்போல் மற்றொரு விஷயம் என்னவென்றால் அது மிகவும் முக்கிய விஷயமாகும். அதாவது சட்டசபைத் தேர்தலில் பொதுத் தொகுதிகளில் சரியான போட்டி ஒன்றும் இல்லை என்றாலும், ஆதிதிராவிட தொகுதிகளில் போட்டி ஏற்படும்போல் இருக்கிறது. அதுவும் சொத்தைப் போட்டியாக இருந்தாலும்,ஜெயித்தாலும், தோற்றாலும் போட்டி அபேட்சகர்களை நிறுத்துவதென்று தோழர் அம்பேத்கார் அவர்கள் சொல்லிவிட்டதால் அதை சமாளிப்பதற்குஆக ஏதாவது தந்திரம் செய்யவேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிட்டதால் அதை (தீண்டாமையை) ப்பற்றிப் பேசுவதும் காந்தியாரின் பஜனை பிரார்த்தனைத் திட்டங்களோடு மூன்றாவது திட்டமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டியதாகிவிட்டது. இவ்வளவோடு இல்லாமல் தமிழ்மக்களால் வெறுக்கப்பட்ட இந்தியை மறுபடியும் புகுத்தவோ அல்லது அதற்கு ஆதரவு தேடவோ வேண்டிய அவசியத்தையும் மேற்படி திட்டங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டியதாக ஆகிவிட்டது. ஆகவே காந்தியாரின் தமிழ் நாட்டு விஜயம் (வரவழைப்பு) பனியா; பார்ப்பனர் பாதுகாப்பு, திராவிடர், ஆதிதிராவிடர் முன்னேற்ற முயற்சிக்கு எதிர்ப்பு, இந்தி பிரசாரம் ஆகிய இந்தக் காரியங்களையே கொண்டதாகும். இதற்கு பனியாக்களுடைய பணம் ஏராளமாய் செலவழிக்கப்படுகிறது என்பதோடு நம்மவர்களிடமிருந்தும் காட்சிக்கு டிக்கட்டு, தரிசனத்துக்குக் காணிக்கை என்பதன் மூலமும் இந்தி பிரசாரத்திற்கு காந்தி வரவின்பேரால் நிதியும் ஏராளமாய் வசூலிக்கப்படுகின்றது.

இதிலிருந்து வடநாட்டு சம்மந்தம் நமக்கு எவ்வளவு கேட்டை விளைவிக்கிறது என்பதும், பெரியார் சொல்லுவது சரியா தப்பா என்பதும் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம். திராவிடமக்கள், திராவிடநாடு தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று

கேட்பதின் முதல் காரணங்கள் பனியா சுரண்டுதலும், பார்ப்பன ஆதிக்கமும், அன்னியமொழி, சமயம் திராவிடர்கள்மீது சுமத்தப்படக்கூடாது என்பவைகளாகும். இந்தக்காரணங்களுக்கு விரோதமாகவே காந்தியார், வடநாட்டுத் "தலைவர்"கள் வரவு இருக்கின்றது.

காங்கரசானது வடநாட்டார் தலைமை இல்லாமலும், காந்தியார் மோகமில்லாமலும் இருந்திருக்குமானால் இந்த நாட்டில் இத்தனை வடநாட்டு சுரண்டுதலும், பொருளாதாரத்துறை வடநாட்டார் ஆதிக்கத்திலும் இருந்திருக்க முடியுமா என்று கேட்கிறோம்.

காங்கரசில் வடநாட்டார் ஆதிக்கமும், காந்தி மாய்கையும் இல்லாதிருக்குமானால் காங்கரஸ் கமிட்டித் தலைவராக ஒரு திராவிடரும், முக்கியஸ்தர்களாகப் பல திராவிடர்களும் இன்று இருக்கும்போது இந்நாட்டு மக்களால் வெறுக்கப்பட்டவர்கள் என்று சொல்லும்படியான இரு பார்ப்பனர்கள் காந்தியாரோடு செல்லவும், மற்றவர்கள் அலட்சியப்படுத்தப்படவுமான காரியம் நடந்திருக்குமா? நடக்கமுடியுமா? என்று கேட்கிறோம்.

காங்கரசில் வடநாட்டார் ஆதிக்கம் இல்லாதிருக்குமானால் தமிழ் மக்களால் ஏகோபித்து வெறுக்கப்பட்ட இந்திமொழி தமிழ்நாட்டில் இவ்வளவு ஆதிக்கம்பெற்று இவ்வளவு பிரசாரம் செய்யப்பட்டு தமிழர்கள் வெட்கமடையும்படி அவர்களது நொந்த புண்களில் நெருப்புஊசி குத்துவதுபோன்ற இந்தக்கூத்து நடக்கவும், அது இவ்வளவு பிரபலப்படுத்தவும் முடியுமா என்று கேட்கிறோம்.

காங்கரசில் வடநாட்டார் ஆதிக்கம் இல்லாதிருந்திருக்குமானால் தமிழர்களில் படித்த பண்டிதர்கள் முதல் சாதாரண பாமரர்கள்வரை மறுக்கப்பட்டதான, மதசம்மந்தமான காரியத்தை அதாவது இராமாயணம் நடந்தகதை அல்ல, இராமன் திராவிடர்களின் கடவுளல்ல என்பதான கருத்துக்கு விரோதமாக ராமபஜனையையும், ராமன் காலக்ஷேபத்தையும், ஆயிரக்கணக்கான தமிழர்களை ஈடுபடும்படியும் கைத்தாளம்போடும்படியும்செய்து இவ்வளவு பிரசாரம்செய்ய முடியுமா என்று கேட்கிறோம்.

தமிழர்களுக்கு எவ்வளவுதான் தேசபக்தி, தேசிய உணர்ச்சி இருந்தாலும், இப்படிப்பட்ட கேடான, கேவலமான உணர்ச்சி கொண்டது சிறிதும் மானமற்றதான காரியங்களுக்கு ஆதரவளிப்பதும் அவற்றில் ஈடுபடுவதும் என்றால் இவர்கள் தங்களை தமிழர்கள் என்றோ, திராவிடர்கள் என்றோ சொல்லிக்கொள்ள தகுதி அற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

இந்தக்காரியங்களைக் காங்கரசு என்று சொல்லுவதும், விடுதலை என்று சொல்லுவதும், சுயராஜ்யம் என்று சொல்லுவதும் விலைமாதை, வேசியை, தேவரடியாள் என்று சொல்லுவது போல் அல்லாமல் வேறு என்ன சொல்ல மூடியும் என்று கேட்கிறோம்.

ஐயோ பரிதாபம்! தமிழனுடைய"தேசாபிமானம்", "சுதந்திரதாகம்", "விடுதலை வேட்கை" என்கின்ற தன்மைக்கு இதுதானா உதாரணம்?

தமிழர்களில் இனஉணர்ச்சி அற்ற சுயநலப்புலிகள் சிலர் காங்கரசில் கலந்து தங்கள் வாழ்க்கை மேம்பாடு அடைய இனத்தைக் காட்டிக்கொடுப்பது என்பது தடுக்க முடியாதது என்றாலும் தமிழர், இளைஞர், மாணவர், சிறு பிள்ளைகள் இப்படி அறிவில்லாமல், மானஉணர்ச்சி இல்லாமல் இப்படிப்பட்ட காங்கரசில் ஈடுபடலாமா—பின் திரியலாமா என்று மிக்க மனவேதனையோடு கேட்கின்றோம்.

காந்தியார் வரவு பனியாக்களுக்குப் பணவேட்டையாகவும், பார்ப்பனர்களுக்குப் பித்தலாட்டபண்டிகையாகவும்,திராவிட மக்களின்மதிகெட்ட—மானங்கெட்ட தன்மையாகவும் முடிந்ததல்லாமல் மற்றபடி இதனால் ஏற்பட்ட நலமென்ன என்று கேட்கின்றோம்.

தமிழனின் இரத்தம் என்றுதான் பரிசுத்தப்படுமோ? தமிழ் இளைஞர்கள், மாணவர்கள் உள்ளங்கள் என்றுதான் தன்மானத்தை நாடுமோ? இவை என்றாவது ஒரு நாள் நடக்குமா, நடக்கக்கூடிய காரியமா? அதற்கேற்ற சந்ததியா?(பிறப்பா இக்கால இளைஞர்?) என்பவை ஒன்றும் புரியாமல் தவிக்கிறோம், தவிக்கிறோம், மிகுதியும் பரதவிக்கிறோம்.

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

## காந்தி பஹிஷ்காரம்

காந்தியார் தென்னாட்டுக்கு வருவதுபற்றி அவரது வரவை திராவிட மக்கள் பஹிஷ்கரிக்கிறார்கள் என்பதற்குஅறிகுறியாக ஏதாவது ஆர்ப்பாட்டம் செய்து காட்டவேண்டுமென்று பல இடங்களில் இருந்தும், சிறப்பாக சென்னையிலிருந்தும் பலதிராவிடத்தோழர்கள் நமக்கு எழுதி இருப்பதோடு நம் கட்டளையை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி எழுதியிருப்பவர்கள் உண்மையான ஆர்வத்தோடு எழுதி இருக்கிறார்கள் என்பதிலும், கட்டளை இட்டால் ஏதாவது ஆர்ப்பாட்டம் செய்து தமிழர்கள் காந்தியத்தை வெறுக்கிறார்கள் என்று இந்திய மக்கள் கவனம் கவரும்படியான காரியங்கள்செய்வார்கள் என்பதிலும் நமக்கு மிந்திரி அளவும் ஐயமில்லை, என்றாலும் காங்கிரசினிடம் இன்று எதிர்ப்புக் காட்டவோ அல்லது அவர்கள் (காங்கிரசார்) மனம் புண்படும்படி நடக்கவோ கூடாது என்று இது சமயம் நாம் கருதுவதாலேயே நம் இளைஞர்களை நாம் இம்மாதிரி காரியங்களில் பிரவேசிக்காமல் இருக்க வேண்டிக் கொண்டும் மற்றும் காங்கரஸ் கூட்டங்களுக்கு அசௌகரியங்கள் செய்யக்கூடாது என்று வேண்டிக் கொண்டும் வருகிறோம்.

காங்கிரசில் பல காலிகள் இருக்கிறார்கள் என்பதும், பல காலிகள் காலித்தனத்தாலேயே தங்கள்தேச பக்தியைக்காட்டி காங்கரசில் ஏதாவது பயன்பெறப்பார்க்கிறார்கள் என்பதும், சில இடங்களில் சில பார்ப்பனர்கள் விஷமத்திற்குத் தூண்டுகோலாயிருந்து காலித்தனத்தைக் கிளப்பி விடுகிறார்கள் என்பதும் நமக்குத் தெரியுமானாலும், அவற்றை லட்சியம் செய்யாமலும், அம்மாதிரியான (அவர்கள் செய்யும்)ஈனக்காரியங்களுக்குஇப்போதுள்ள பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் காரணஸ்தவர்களாகவோ ஆதரவாளர்களாகவோ இருக்கமாட்டார்கள் என்று நினைத்தும் வீரமான முறையில் நடந்துகொள்ள நமக்கு நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று கருதியும் நாம் நம்மக்களை அடக்கி வருகிறோமே ஒழியவேறில்லை. ஆகையால் நம் இளைஞர்கள் இதைத்தவறாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறோம்.

## "விடுதலை" தினசரி

திருச்சியில் 20-1-46ந் தேதி நடந்த திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்தில் விடுதலை பத்திரிகையை திராவிட கழக பிரசாரத்திற்குஆக நடத்தவேண்டுமென்றும், அதற்கு ஏற்படும் நஷ்டத்திற்குஆக ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அதிகப்படாமல் விடுதலைக்கு நஷ்டம்ஆகி வரும்வரை உதவிவருவதாகவும், பெரியாருக்கு வாக்களித்து, பெரியார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

இப்போது விடுதலை சர்க்காரால் பெரியாருக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டாகிவிட்டதுடன் அவர் சொந்தத்தில் நடத்தும்படியான சகல சவுகரியமும் இருந்து வருகிறது. நஷ்டத்திற்கும் திராவிட கழக நிர்வாகக் கமிட்டி ஒரு அளவுக்கு வாக்களித்திருப்பதால் இனி விடுதலை தினசரியாக நடைபெற நல்ல நிர்வாகிகள்தான் தேவையாக இருக்கின்றார்கள்.

அ-பி, ராய்ட்டர் சேதிகளுடன் டபிள்கிரவுன் (பழைய விடுதலை) சைசில் 4பக்கங்களாக வெளியிடப் போதுமான சாதனங்களும் இருக்கின்றன.

எனவே பிப்ரவரி கடைசியிலோ, மார்ச்சு முதலிலோ விடுதலை வெளியாக்கப்பட வேண்டும் என்கின்றஆவல் பெரியாருக்கு இருப்பதால், நல்ல நிர்வாகிகள் கிடைத்தால் அநேகமாக விடுதலை வெளிவரலாம்.

ஆங்காங்குள்ள ஏஜண்டுகள் டிபாசிட் கட்டத்தயாராய் இருக்க வேண்டும் என்பதோடு எத்தனை பிரதிகள் தேவைப்படும் என்பதையும் எவ்வளவு டிபாசிட் கட்டக்கூடும் என்பதையும் உடனே குடி அரசு காரியாலய மானேஜருக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

## திருநெல்வேலி முனிசிபாலிட்டியில் பெரியாருக்கு வரவேற்பு

12-1-46ந் தேதி கூடிய திருநெல்வேலி முனிசிபல் கவுன்சில் மீட்டிங்கில் திருநெல்வேலி ஜில்லா திராவிடர்கழக மாநாட்டின் திறப்புவிழாவுக்குஆகப் பெரியார் திருநெல்வேலிக்கு வருவதால், அது சமயம் அவருக்கு முனிசிபல் கவுன்சில் சார்பாகவரவேற்று ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்தளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## வந்தேமாதரத்திற்குப்பதில் பெரியார் வாழ்க

13-1-46ல் கரூர் நெசவுத் தொழிலாளர் பெயரால் நடத்தப்பட்ட மாநாட்டில் மூவர்ணக்கொடியேற்றப்படுகையில் மக்கள் மறுத்தனர். மறுப்புக்குச் செவிசாய்க்காமல் "வந்தேமாதரம்" என்னும் சத்தத்தைக் கிளப்ப "பெரியார் வாழ்க! திராவிடநாடு திராவிடருக்கே!" எனும் ஒலி வானைப்பிளந்தது.

தோழர் ஆறுமுகம் மேடைக்குச் சென்று பேசி வெறக்கும் தோழர்களை அமைதியாய் வெளிவரும்படி கேட்டுக் கொள்ள சுமார் 200 தோழர்கள் "திராவிடநாடு திராவிடருக்கே! புரட்சி ஓங்குக!" எனக் கூச்சலிட்டுக் கொண்டே வெளிவந்து திராவிடர் கழகம் சென்று தோழர் ஆர். பி. சாமி தலைமையில் "கைத்தறி நெசவுத்தொழிலாளர் சங்கம்" அமைக்க வேண்டியது குறித்துப் பேசினார்கள்.

பின் தோழர் எம். ஆர். ராமசாமி தலைவராகவும் தோழர் ஆர்.கிருஷ்ணன் செயலாளராகவும் கொண்ட ஒரு காரியக்கமிட்டி அமைத்து "கைத்தறிநெசவுத் தொழிலாளர் சங்கம்" நிறுவப்பட்டது.

## இயக்கச் செய்திகள்

6-1-46ல் கொழும்பு பாப்பாங்குடி பகுத்தறிவுக் கழகக் கூட்டம், தோழர் என். எஸ். தவமணி தலைமையில் நடந்தது. தோழர்கள் எஸ். இ. நல்லையா, எஸ். எஸ். பெரியசாமி முதலியோர் பேசினர். பாரதிதாசன் எழுதிய பாண்டியன் பரிசு ரூ. 38க்கு ஏலத்தில் விடப்பட்டது.

o o

13-1-46ல் திருச்சி நாகம்மையார் திராவிடர் கழக அங்கத்தினர்கூட்டம் தோழர் தி. மா. இராமநாதன் தலைமையில் நடந்தது. கிருஷ்ணன் பாகவதர் விடுதலை கோரியும், இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

o o

மண்டபம்கேம்பு, அண்ணாதுரை பகுத்தறிவுக் கழகப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். என். சுப்பையா தலைமையில் 16-1-46ல் நடைபெற்றது. தோழர்கள் அழகிரி, மாணிக்கம், காசிவேல் பேசினர். திருச்சித் தீர்மானங்களை ஆதரித்தும், கறுப்புச்சட்டைப்படையை ஆதரித்து உறுப்பினர்கள் சேர்க்கவும், இந்திஎதிர்ப்பு வீரர் பழனிச்சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

19-12-45ல் மதுரை தியாகராயநகர் திராவிட இளைஞர் கழக வாசகசாலை ஆரம்பவிழா தோழர் திருப்பதி தலைமையில் நடைபெற்றது. தோழர் அழகரசன் சொற்பொழிவாற்றினார். நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

சிதம்பரம் திராவிடர் கழகத்தின் சார்பாக 9-1-46ம் நாள், பச்சையப்பன் ஸ்கூல் தெருவில் செல்வம் வாசகசாலையைத் தோழர் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம்.ஏ., அவர்கள் திறந்து வைத்தார். தோழர்களான சடகோபன், க. முத்தையா ஆகியவர்கள் பேசினர்.

o o

அமைந்தகரை திராவிடர் கல்வி வளர்ச்சிக் கழக சார்பாக 14-1-46ல் தோழர் தங்கரூபன் அவர்கள் தலைமையில் தோழர்கள் தருமலிங்கம்,பழனிசாமி, அரங்கநாதன், சிவலிங்கம், மகிமைதாஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

20-12-45ல்சேலம்செவ்வாய்பேட்டை தேவாங்கபுரம்அர்த்தநாரிசெட்டி தெருவு திராவிடர் இளைஞர் கழகம் டாக்டர் ஆர். ஜி. கோபால் தலைமையில் கூட்டப்பட்டு கழகத்திற்கு 13 பேர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

# கறுப்புச்சட்டைப் படை அணி வகுப்பு

## திருத்துறைப்பூண்டியில் இரு மாநாடுகள்

திருத்துறைப்பூண்டிக்கு 5-1-46 தேதி இரவே ஜில்லாவின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்களும், க. ச. ப. தொண்டர்களும் ஆயிரத்திற்கு மேற்கொண்டு வந்து விட்டனர்.

6-1.46 காலை 8 மணிக்கு ஜவுளிக் கடைத்தெரு நேரு மில்லில் இருந்து க. ச. படை அணிவகுப்போடும், மன்னார்குடி நாதசுரவித்துவான் தோழர் மாணிக்கம் அவர்களின் மேளவாத்தியத்தோடும் ஊர்வலம் ஆரம்பமாகி "நமது தலைவர் பெரியார்", "அடைந்தே தீருவோம் திராவிடநாடு" என்பனபோன்ற வாழ்த்தொலிகளோடு தலைவர்களை வரவேற்க ரயிலடி சென்று வந்த தோழர்களுடன் பெரியார் படம் வைத்து உற்சாகத்தோடு வாழ்த்தொலிகள் செய்து கொண்டு மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தனர். ஏறக்குறைய 3000 மக்கள் உள்ளும் புறமும் நிறைந்திருந்தனர்.

வழி நெடுகத் தோரணங்களும், இயக்கக் கருத்துகள் எழுதப்பட்ட வரவேற்புப் படுதாக்களும் ஏராளமாய்க் கட்டப்பட்டு இருந்ததுடன் செல்வம் பந்தல் பல வகைக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

கடலூர் இளந்தோழர் வீரமணி அவர்கள் வீரவுரையாற்றி மாணவர் செங்கொடியினை ஏற்றிவைக்க காலை 9-30 மணிக்கு தஞ்சை மாவட்ட 3-வது திராவிட மாணவர் மாநாடு ஆரம்பமாயிற்று. தோழர் மு. கருணாநிதியவர்கள் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றி மாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

வரவேற்புக்கழகத் தலைவர், தோழர் எஸ். தவமணி இராசன் அவர்களைத் தலைமை வகிக்கும்படி முன்மொழிந்தார். தோழர்கள் சொக்கப்பா, இளம்வழுதி, வெற்பரசன், இந்திராணி ஆகியோர் வழிமொழிய தோழர் தவமணி இராசன் பலத்த கையொலிக்கிடையே தலைமையேற்றார். திராவிட மாணவர் இயக்கம் ஆரம்பிக்கவேண்டியிருந்த காரணங்களையும், அதன் வளர்ச்சியையும் விளக்கிப் பேசியபின் பல தீர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திராவிட நாட்டுப் பிரிவினையை ஆதரித்தும், என்.எஸ்.கே., எம்.கே.டி. ஆகியோரின் விடுதலையைக்கோரியும், தமிழ்ப் பாடங்களையும், சரித்திரத்தையும் சீர்திருத்தவும், தமிழாசிரியர் சம்பள உயர்வு பற்றியும், தோழர்கள் திருவேங்கட முதலியார் பி. ஏ., எல். டி., காரைக்கால் சொக்கலிங்கம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கொண்டுவரப்பட்ட எட்டுத் தீர்மானங்களை விளக்கிப் பல மாணவத் தோழர்கள் பேசினார்கள்.

அதன்பின் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரியதொரு சொற்பெருக்காற்றி புரட்சிக்கவிஞரின் படத்தைத் திறந்துவைத்தார். தோழர் ஏ. பி. சனார்த்தனம் அவர்கள், தலைவர் பெரியார் அவர்களின் வெற்றிகளையும், சிறப்புகளையும் விரித்துக்கூறி பெரியார் படத்தைத் திறந்துவைத்தார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி கூறலுடன் மாணவர் மாநாடு முடிவுற்றது.

இடைவேளை உணவுக்குப்பின் பிற்பகல் 2-30 மணிக்கு தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தலைமையில் ,கறுப்புச் சட்டைப்படை அணிவகுப்பு நடைபெற்றது. சுமார் 600-தொண்டர்கள் வந்திருந்தனர். படையினர் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைக்குறித்து தோழர் சம்பத் விளக்கினார். பின்னர் அதிகமான க. ச. படை தொண்டர்களை அனுப்பியிருந்த நாகப்பட்டினம் தாலூகாவிற்கு ஒரு வெள்ளிப்பதக்கம் அளிக்கப்பட்டது. மாநாட்டுப் பந்தலுக்குள் தொண்டர்கள் வந்ததும் முத்துப்பேட்டை க. ச. ப. தொண்டர் தோழர் இராமானுசம் அவர்களால் பளுத்தூக்கும் (Weightlifting) உடற்பயிற்சி செய்து காட்டப்பட்டு அதற்காக அவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் அளிக்கப்பட்டது. பின் தஞ்சைமாவட்ட முதலாவது க. ச. படை மாநாடு தொடங்கியது. கடலூர் தோழர் ஆ. திராவிடமணியவர்கள் விளக்கமாகப் பேசி கறுப்புக்கொடியினை ஏற்றிவைத்தார்கள். மாநாட்டைத் திறந்துவைக்கையில் தோழர் சம்பத் அவர்கள் க. ச. படையின் நோக்கங்களையும், இந்திய கம்யூனிஸ்டுகளின் மோசமான கொள்கை—திட்டங்களையும் நன்றாக விளக்கியதோடு அவர்களிடம் திராவிடத்தோழர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்பதையும்குறிப்பிட்டார். வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் பி எஸ். மணியம் அவர்கள் யாவரையும் வரவேற்றுப் பேசி தலைவரை முன்மொழிந்தார். பல தோழர்கள் ஆதரித்துப் பேசியபின் பலத்த கைதட்டலுக்கிடையே தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்று சுமார் 2-மணிநேரம் உணர்ச்சிமிக்க தலைமையுரையாற்றினார்.

பின்னர் கீழ்க்கண்ட முறையில் 3-தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கறுப்புச்சட்டைத் தொண்டர் படைக்கான விதிகளையும், கொள்கை, திட்டங்களையும் விளக்கி ஒரு சிறு வெளியீடு அச்சிட்டு உதவவேண்டுமென்றும், அதன் அலுவல்களை ஒழுங்குபடுத்தி நடத்திவர அதற்கான ஒரு தனிக்குழுவை ஏற்படுத்தவேண்டுமென்றும் தலைவர் பெரியார் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன் மொழிந்தவர்;

காஞ்சி கலியாணசுந்தரம்

பின் மொழிந்தவர்:

எஸ். கருணானந்தம்

2. திராவிடநாட்டுப் பிரிவினைப் போரிலும், திராவிட சமுதாய இழிவுகளைப் போக்க ஏற்படும் கிளர்ச்சிப் போர்களிலும் தீவிரமாகப் பங்குகொள்ளும் முன்னணிப்படை கறுப்புச்சட்டைத் தொண்டர்படையானதால், திராவிடத் தோழர்களும் இளைஞர்களும், தாய்மார்களும் இப்படையில் சேர்வதோடு திராவிடப் பெரியோர்களும் இதற்குத் தக்க ஆதரவு கொடுத்துதவும்படி இம்மாநாடு கோருகிறது.

முன்: மூவலூர் இராமாமிர்தத்தம்மாள்
பின்: ஏ. பி. சனார்த்தனம் எம். ஏ.,

3. மாவட்டம் ஒன்றுக்குக் குறைந்தது ஆயிரம் தொண்டர்களையாவது விரைவில் சேர்க்குமாறு கறுப்புச்சட்டைத் தொண்டர் படை அமைப்புக் குழுவினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: இரெ. இளம்வழுதி
பின்: அழகிறைவன்

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் தோழர்கள் கடலூர் வீரமணியும், டி. வி, நாராயணசாமி அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் 1000 க. ச. படை தொண்டர்களுக்கு மேற்பட்டுத் திரட்ட கீழ்க்கண்டவாறு தாலூகா வாரியாக ஒரு அமைப்புக்குழு நியமிக்கப்பட்டது.

தஞ்சாவூர்: முத்துசாமி
பாபநாசம்: சுந்தரேசன்
கும்பகோணம் எஸ். எஸ். வாசன்
மாயவரம்: தீ. ப. நாதன்
நன்னிலம்; சௌரிராசன்
நாகை: பக்கிரிசாமி
திருத்துறைப்பூண்டி: எம். கே. ஹாஜாபீர், எஸ். சாமிநாதன்
மன்னார்குடி: ஆர். ராமச்சந்திரன், எஸ். சரவணன்
பட்டுக்கோட்டை: வி. எஸ். குழந்தை, என். பி. காளியப்பன்
அறந்தாங்கி: குருசாமி

மேற்கண்ட தோழர்கள் தாலூகாவுக்கு 100 பேருக்குக் குறையாமல் க. ச. தொண்டர்களைச் சேர்த்துத்தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டதும், தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் தோழர் வி. எஸ். பி. யாகூப் அவர்களின் நன்றிகூறலோடு மாநாடு இரவு 9 மணிக்கு முடிவுற்றது.

o o

7-1-46 அன்று மாலை 4 மணிக்கு ஆலத்தம்பாடி திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் என். பி. காளியப்பன் தலைமையில் தோழர்கள் கடலூர்

# பொங்கல் நாள்

14-1-46ல் திட்டக்குடி ரேடியோ மைதானத்தில் பொங்கல் புதுநாள் கொண்டாட்டம் தோழர் எம். கிருஷ்ணசாமி தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் வித்வான் முத்தழகன், பண்டிதர் விருத்தகாசிப்பிள்ளை, முருகேசன், எஸ். வேலாயுதம், கிருட்டிணசாமி மற்றும் பலர் சொற்பெருக்காற்றினர்.

o o

வட சென்னை நடிகர்கழக ஆதரவில் நடிகர் கழக மைதானத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடந்த பொங்கல் நாள் கூட்டத்தில் தோழர் வேணுகோபால் பாகவதர் "விஸ்வநாதன் அல்லது சீர்திருத்தவாதி" என்னும் கதையை காலட்சேப முறையில் சொற்பொழிவாற்றினார்.

o o

14-1-46ல் நாகை மணி பகுத்தறிவுக் கழகத்தின் ஆதரவில் பெரியார் திருஉருவப்படத்தை அழகிய விமானத்தில் வைத்து முக்கிய தெருக்கள் வழியே ஊர்வலமாகச் சென்றனர். பின்னர் தோழர் பக்கிரிசாமி தலைமையில் கூட்டம் நடந்தது.

o o

மைலாப்பூர் திராவிடர் கழக ஆதரவில் தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் தலைமையில் கொண்டாடிய பொங்கல் விழாவில் தோழர்கள் கே. அப்பாதுரை எம். எ. எல். டி., கே. அன்பழகன் பி. எ. (ஆனர்ஸ்) எஸ். எஸ். பெருமாள் பி. எ., என். ஜீவரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

இராசிபுரம் சேடர்பாளையத்தில் 15-1-46ல் பெரிய ஊர்வலமாய்ப் பந்தோடும் மைதானத்தையடைந்து தோழர் கே. வி. கே. இராமசாமி தலைமையில் கூட்டம் நடந்தது. தோழர்கள் அங்கமுத்து, அரங்கசாமி, சேலம் சித்தையன் முதலியோர் பேசினர், கூட்டத்திலிருந்த வெங்கடராம செட்டியார் திராவிடர் கழகக்கட்டிடத்திற்குகாலிமனை ஒன்றை நன்கொடை அளிப்பதாக வாக்களித்தார்.

o o

14-1-46 பொங்கல் தினத்தன்று தஞ்சை மகர் நோன்பு சாவடியில் 'பாரதிதாசன் வாசக மன்றம்' தோழர் இழங்கோ தலைமையில் ஆரம்பமாயிற்று. தோழர்கள் பப்பண்ணா கபிலர், ஞானவீரமணி, ஆ. திராவிடமணி, காஞ்சி கலியாணசுந்தரம், எஸ். கருணானந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். என். எஸ். கே., எம். கே. டி. விடுதலை கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் பாண்டியன் நன்றிகூற, கூட்டம் முடிவுற்றது.

சௌந்தரபாண்டியன், சுந்தரேசன், இமயவரம்பன் கோவிந்தராசன் முதலியோர் பேசினர்.

o o

14-1-46ல் பெண்ணாகடம் சிவகுருநாதன் கழக ஆதரவில் பொங்கல் திருநாள் தோழர் இராமசாமி பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் புலவர் மு. வேலாயுதன், செ. ராதாகிருட்டினன், இ. சிவப்பிரகாசன், கண்ணபிரான், கைலாசம் பிள்ளை ஆகியோர் பேசினர்.

o o

சலகண்டபுரம் 14-1-46ல் ப. க. சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் கொண்டாடிய பொங்கல் விழாவில் தோழர்கள் ஆசிரியர் புலவரேறு, அ. வரதநஞ்சையா பிள்ளை, ப. கண்ணன் ஆகியோர் பேசினர்.

o o

16-1-46ல் கோவையில் திராவிடர் கழகத்தின் ஆதரவில் தோழர் பண்டிதர் இராம கிருஷ்ண பிள்ளை தலைமையில் கொண்டாடிய தமிழ்த்திருநாளில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எ. பி. சனார்த்தனம், எஸ். தவமணிராசன் பேசினர்.

o o

14-1-46ல் திருவண்ணாமலையில் திராவிடர் கழக ஆதரவில் தோழர் பி. டபிள்யூ. தியாகராசன் தலைமையில் நடந்த தமிழர் திருநாளில் பலர் பேசினர்.

o o

14-1-46 பொங்கல் நாளன்று வாழ்குடை திராவிடர்கழகப் புதியகட்டிடத்தில் தோழர் அருணாசலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பலர் பேசினர்.

o o

13-1-46ல் வடக்கநாதலில் வாலிபர் கழக ஆதரவில் தோழர் வீ. பூவராகவன் பி. எ. தலைமையில் நடந்த பொங்கல் விழாக் கூட்டத்தில் தோழர்கள் வரதராசன், வி. வினைதீர்த்தான், பி. நாராயணன், மாணிக்கம் ஆகியோர் பேசினர்.

o o

சிதம்பரம் மருத்துவர் கழகத்தின் சார்பாக 14-1-46ம் நாள் புலவர் மாணிக்கம் அவர்கள் தலைமையில் தமிழ்த்திருநாள் கொண்டாடப்பெற்றது. அதுகாலை தோழர்களான புலவர் த. முருகேசன், டி. கணபதி முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

14-1-46 திங்கள் மாலை 6-மணிக்கு அண்ணாமலைநகர் வடக்கிருப்பில் தோழர் கி. தியாகராசன் தலைமையில் பொங்கல் திருநாள் கொண்டாடப்பெற்றது. தோழர்கள் வே. நாராயணசாமி, மு. குருசாமி, த. நாராயணசாமி இராமகிருட்டினன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

14-1-46ல் திருவாரூரில் தோழர் ராசு தலைமையில் நடந்த தமிழர் திருநாள் கூட்டத்தில் தோழர்கள் எஸ். கருணாநந்தம். வி. ஜி. அரங்கராசு, எஸ். சுந்திரமூர்த்தி மற்றும் பலரும் பேசினர்.

o o

15-1-46ல் திருவாரூர் பகுத்தறிவுக் கழகத்தில் தோழர் என். உருத்திராபதி தலைமையில் நடந்த தமிழர் திருநாள் கூட்டத்தில் தோழர்கள் நடராசன், தியகராசன், பக்கிரிசாமி, மற்றும் பலரும் பேசினர்.

---

புதுக்கோட்டையில் "குடி அரசு" கிடைக்குமிடம்:-

அரு. பெரியண்ணன்,
செந்தமிழ்ப் பதிப்பகம், கீழமாசி வீதி,

## நன்கொடை

கொழும்புத் தோழர் ந. காவிமுத்து அவர்கள் திராவிடர் கழகத்திற்கு அனுப்பிய ரூபாய் 3. வரப்பெற்றோம்.

## ராமராஜ்யத்தில் தண்ணீர்

21-1-46ல் தோழர் எம். பி. பெரியசாமி எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்குக்குடி தண்ணீர் வசதிக்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒரு எம். எல். ஏ.,ஆக இருந்துங்கூட தமது மக்கள் குடிக்கத் தண்ணீருக்கும் தீர்மானம் போட வேண்டிய நிலையில் இருக்கிறது ராமராஜ்யம்!

## "பாதகச் செய்தி"

ஜனவரித்திங்கள் 19ம் நாள் "பாரததேவி" பத்திரிகையில் திராவிடர்கழக (ஜஸ்டிஸ்) கட்சியில் 20வருடமாய்இருந்தவர்களான தோழர்கள் ரோ. சு. நவகோடி செட்டியாரும், பி. லோகையசெட்டியாரும் 12-12-45ல் காங்கிரசில் சேர்ந்ததாக வந்த செய்திப்படி ஷை தோழர்கள் திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) கட்சியில் என்றும் இருந்ததில்லையென்றும் தோழர் நவகோடியின் வயது 17 என்றும் லோகய்யாவுக்கு வயது 23 தான் என்றும் தோழர் கே. வி. குப்புசாமி அறிவிக்கிறார்.

## மறைவு

காந்தைப் புலவர் கல்லூரித் தலைவர் தோழர் பி. ஆர். மீனாட்சிசுந்தரம் அவர்களுடைய பாட்டனார் புதுக்கோட்டை புலவராசு உலகநாத பிள்ளை 1-1-46ல் திடீரென்று இயற்கை யெய்தினார். பிரிவால் வருந்தும் சுற்றத்தார்க்கு நமது அனுதாபம்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# கலைஞர்பால் கருணை

"ஈசன்"

தனி நாகரிகச் சிறப்பினை நாவலந் தீவில் மட்டுமன்றி நாடுகள் பலவினும் பரப்பி நற்புகழ் பெற்று நானிலமாண்ட பரம்பரையொன்றை தஞ்சமென வந்த வஞ்சகக்கூட்டமொன்று தாள் பணிய வைத்தது. ஆண்டு அடிமைப்பட்ட அவ்வீரசப் பெருங்குடி இன்று எழுச்சி பெற்று எழுந்து நிற்கமுடியாத நிலையில் தத்தளிக்கிறது. அடிமைகொண்ட ஆணவக்கூட்டம் ஆண்டவன் பிரதிநிதியாக இந்நாள் எக்காளமிடுகிறது. நாட்டுக்குரிய இனம் நலிவுமிக உறுவதையும், நாடோடி நிலையில் வந்த நயவஞ்சகக் கூட்டம் நலங்கள் பல நுகர்வதையும் சட்டமும் நீதியும் காணாமலில்லை. கண்டும் காணாதவைபோலிருக்கின்றன. காரணம்—மதம் குறுக்கிடுகிறது. ஆண்டவன் இடைநிற்கிறார், வேதமும் சாஸ்திரமும் வழிமறைக்கின்றன, பூதேவருக்கென ஆண்டவன் வகுத்துள்ள அறவிதிகளெங்கே? கேவலம் மானிடருக்கு மானிடர்களாலேயே வகுக்கப்பட்டு வழக்கில் இருந்துவரும் சட்டநீதிகளெங்கே?

நாட்டின் தலைவாசலை பகைவன் கிட்டிவிட்டான். பகைவனின் வீரர்களிரண்டொருவரும் நாட்டின் இரண்டொரு பாகங்களில் தங்களது கைவேலையைக்காட்டி அதன்மூலம் தங்களது வருகையையும் அறிவித்துவிட்டனர். நாட்டு அரசாங்கம் தகுந்த தற்காப்பு அமைக்கும் நேரம். தற்காப்போடு பகைவனை எதிர்த்துநிற்க முஸ்தீப்பு தேடும் நேரம். அதேநேரத்தில் நாட்டிடையே பிளவு. பிளவல்ல பொருளற்றபுரட்சி. புரட்சியென்றும் புகலேன். பொறுப்பை அறியவும் ஏற்கவும் முடியாத நிலையில் கலவரம். "ஆளுங்கூட்டமே வெளியேறு" என்ற கூச்சல், தந்தி தபால் ஆபீஸ் தகனம், ரயில் கவிழ்ப்பு, தண்டவாளப் பெயர்ப்பு, பொருள் சேதத்தோடு பெறற்கரிய உயிர்ச்சேதம் நாட்டுநிலைகுலைவுற்றதோடு ஆட்சிநிலையும் சீர்கெட்டது. ஒரு பக்கம் மாற்றான், மறுபக்கம் எதிர்பாராத கலவரக் கும்பல். இரு சார்பினரையும் சமாளித்தது அரசாங்கம் அந்நேரத்தில். காலப்போக்கிலே கலவரக் கூட்டத்தினர் மன்னிப்புப்பெற்றனர். மன்னிப்புப்பேற்றதோடு மட்டுமல்ல மன்னிப்பையும் வழங்கினர். இருதரப்பினரும் கூடினர் குலாவினர்; நட்புறுதி செய்துகொண்டனர். பிரிந்தனர். கொடுஞ்செயல் விளைத்தில் பகைவனையும் விஞ்சிய கலவரக்கும்பலைக் காத்து ரட்சிக்க சட்டமும் நீதியும் இணங்கின இடமிருக்கிறதாயென்று ஆராயப்புகுதல் கூடாது, காரணம் தேசாபிமானத்திற்கு துரோகமிழைத்தவராவோம். நாட்டுப்பற்றாளர் என்ற பெயரில் சட்டம் அவர்களைக் காத்தது, காக்க கங்கணமும் கட்டி நிற்கிறது.

உலகப் பொது எதிரியைத் தாக்கி முறியடிக்க உலகநாடுகள் அனைத்தும் போர்முனைக்கு தங்கள் தங்கள் பங்குக்கான படைத் தளவாடங்களை அனுப்பி வைத்தன. பொது எதிரி ஓர்புறம், உலக சமாதானம் விழையும் ஐக்கியநாட்டார் எதிர்புறம். போர் உச்சநிலையடையுந் தருவாய் எதிரியின் வஞ்சக சூழ்ச்சியாலோ, ஆசைமொழியாலோ அல்லது வேறு யாது காரணத்தாலோ ஒரு நாட்டிலிருந்துவந்த பெரும்படையின் பகுதியொன்று எதிரியிடம் ஒன்றியது. ஆம். எதிரியை தனது பெருந்துணைவனாகக் கைக்கொண்டது. அதுவோடன்றி தனது முன்னாள் சகாப்படையினரையும் தாக்க முற்பட்டது. நாளடைவில் பொது எதிரி வீழ்ந்தான். அவனது கோட்டை கொத்தளங்களும், படைத் தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன. போர்முனையில் அறிவுதம்பெற்ற அப்படையினரும் தமது முன்னாள் தலைவர் கையில் சிக்கினர். படைமுனையில் துரோகம் இழைத்தவருக்கு தண்டனை தருவதா? வேண்டாமா? என்பதை ஆராய சட்டமும் நீதியும் தங்களது பிரதிநிதிகளை அமர்த்தியுள்ளன. இது முறையல்லவே. அத்தகைய செயல்புரிந்தோருக்கு எத்தகைய தண்டனை அளிக்கப்படவேண்டும் என்று ஆராயவேண்டியதல்லவா சட்டத்தின் நீதி, நீதியின் தன்மை என்று கூறுதல் கூடாது. சட்டமும் நீதியும் இவ்வுண்மையை அறிந்தேயிருக்கின்றன. ஆனால்—சுதந்தரத்துக்குழைக்கும் சுத்த மனத் தலைவர்கள் குறுக்கிடுறார்கள். சுதந்தர வீறொலிக்குமுன்னர் சட்டமும் நீதியும் எம்மாத்திரம்;

வழுக்கிவிழுந்த சமுதாயம் எழ முயற்சிக்கும் வேளை. வஞ்சகர்தந்த வேதனை பலவையும் பொறுத்து நடைப்பிணங்களாய்த் திரிந்து நாட்டில் வீழ்ந்து மாண்ட ஆயிரங்கோடி மக்களின் சந்ததிகள் சற்று உணர்வுபெற்று தலையெடுக்கும் காலம். நாட்டின் வளத்தைக் கவ்வியதோடு நஞ்சு நிறை நாகரிகத்தைப் புகுத்தி நற்பண்பும் நல்லாண்மையும் மிக்கவரை பல்துறையிலும் வீழ்த்திய நரிக்கூட்டத்தை நடுங்க வைக்கும் வகையில் கலைக்கொரு இயக்கம் அறிவுக்கொரு இயக்கம், ஆட்சிக்கொரு இயக்கம் காட்சியளிக்கும் நேரம், இடத்திற்கேற்ற இனம், இனத்திற்கேற்ற கலையென்று மக்கள் உணர்வுபெறுங் காலம். தனக்கென இயலோடு இசையும், இசையோடு கூத்தும் பண்டிருந்தது. இப்பவும் தோற்றுவித்துக்கொள்ள முடியுமென்றுணர்ந்து இசைவாணரையும் கலை விற்பனர்களையும்வாழ்ந்து கெட்ட சமுதாயம் வரவேற்கும் வேளை, மக்களின் உணர்ச்சிப்பெருக்கிலே உற்சாக வேகத்திலே வெளிக்கிளம்பினர் இரண்டு கலைவாணர்கள்; நாட்டு மக்களின் உள்ளங்களனைத்தையும் தமதாக்கிக்கொண்டனர். மாற்றானை திகைக்கமட்டுமல்ல திகிலுறவுஞ் செய்தனர். மக்கள் அவ்விருவரையும் தம் வாழ்வு என்று கருதினர். நாடகக் கலைக்காகவே தோன்றிய செம்மல்களிருவரும் நாடகம் தமக்காகத்தான் உய்ந்திருந்தது என்பதை மெய்ப்பித்தனர். நாடகம் அகத்தை நாடுந்தன்மையது. அதுவன்றியும் உணர்வை பெருக்கி உறுதி வழிகாட்டுவது என்பதை நிரூபித்தனர். தகுந்த காலத்தில் தகுந்த முறையில் கிடைத்த இணையில் இருவரும். ஆயினும் என்செய. பலநூற்றாண்டுகள் பாரோர்மெச்ச நாகரிக மேம்பாட்டுடன் வாழ்ந்த நாடுகள் காலப்போக்கில் வீழ்ச்சியுற்றதைக் கேட்டிருக்கிறோம். எல்லோரும் எள்ளி நகைக்கும் வழியில் கேவல நிலையிலிருந்த நாடுகள் நாளடைவில் அறிவுப்பாதையின் வழி சென்று அணிபெறு நாகரிகத்தை அமைத்துக்கொண்டதை கேள்விப்பட்டிருப்பதோடல்லாமல் கண்கூடாகவும் பார்த்திருக்கிறோம். ஆனால் எண்ணிறந்த காலம் இணையிலாட்சிபுரிந்து இடையில் வஞ்சகர் செயலால் வழுக்கி விழுந்து, வீழ்ச்சியுற்ற அடிமை நிலையில் அளவற்ற ஆண்டுகள் அமிழ்ந்து கிடந்து, பிறகு கால மாறுபாட்டால் தலையெடுக்க எண்ணும் சமுதாயம் சறுக்கிவிடப்பட்டதை கேட்டதுமில்லை; கண்டதுமில்லை. இப்பொழுதுதான் நேரடியாக உணருகிறோம். நாட்டவரின் சொத்து எனக் கருதப்பட்டுவந்த கலைஞர்களிருவரும் ஒருநாள் குற்றவாளிகளாயினர். மன்னனின் மகத்தான உயிரொன்றை வதை செய்ய சதிசெய்தனர் என்பது குற்றச்சாட்டு. நாடெங்கணும் அவதியும், அழுகுரலும் என் செய்வது, சட்டமும் நீதியும் சேர்ந்து சதிவழக்கை ஆய்ந்தன. இறுதியில் முடிவுங்கண்டன. கலைஞருக்குக் கடுந்தண்டனை வழங்கின. இது சட்டங்கண்ட முடிவு; நீதிகண்ட நியாயம். என் செய்வது?

இயற்கையின் தன்மையினையும், அமைப்பையும் நாமறிவோம். நியூடன் என்ற விஞ்ஞானப் பேராசிரியரின் பௌதிகச் சட்டங்களையும் படித்திருக்கிறோம். உடற்கூறும் அதற்கேற்ற உள்ளக்கூறும் வாழும் நிலக்கூற்றையொத்ததே என்பதையும் தெரிந்துள்ளோம். கற்றுத் தெளிந்த கலைஞர்கள் பலர் கருத்திழந்தமைக்கு சான்றுகள் பல பல உள. கருத்துமிக்க கலை உள்ளங்கள் கம்பிக்குப்பின்னால் வாடுதல் பொருத்தமன்று. கலைப்பசி மிக்க வேகத்தில் பரவிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்கள் ஏற்று நடத்தவேண்டிய பொறுப்புகள் பலவுள. நாட்டு வளர்ச்சிக்கு கலை தேவை; கலை மேன்மைக்கு கலைஞர்கள் தேவை, கலைஞர்கள் வருகைக்கு கருணை தேவை.

# திராவிடர் கழகங்கள்

6-1-46ல் ஸ்ரீவில்லிபுத்தூரில் திராவிட கழக உறுப்பினர்களின் கூட்டம் தோழர் க. சி. ப. சங்கரலிங்கநாடார் மாக்கடையில் தோழர் அ. மு. வெள்ளைசாமி தலைமையில் கூடியது. சேலம், திருச்சி மாநாட்டு தீர்மானங்களை ஆதரிப்பதாயும், சேலம் மாநாட்டு தீர்மானப்படி பட்டம் பதவிகளை விட்டவர்களை பாராட்டுவதாயும் தீர்மானங்கள் நிறைவேறின. தோழர் எம். எஸ். சண்முகத்தை தலைவராகவும், கே. சி. பி. சிதம்பரத்தை செயலாளராகவும் கொண்ட நிர்வாக குழு அமைக்கப்பட்டது.

14-1-46ல் மேலசண்முகபுரத்தில் தோழர் எஸ். பெரியசாமி தலைமையில் நடந்த திராவிட கழக கூட்டத்தில் தோழர் எஸ். திரவியத்தைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாக குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேலசண்முகபுரம் திராவிட கழக ஆதரவில் 15-1-46ல் தோழர் நீதிமாணிக்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

13-1-46 தஞ்சை மேல திருப்பந்துருத்தியில் திராவிடர் கழக இரண்டாவது ஆண்டுவிழா தோழர் கோ. ஆளவந்தார் தலைமையில் நடந்தது. தோழர் கோதண்டராமன் பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் முகம்மது உசேன், பிச்சையா, புலவர் ஆறுமுகம், எஸ். ஆர். சுப்பண்ணா ஆகியோர் பேசினர்.

24-12-45 கனியூர் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் தோழர் எ. எஸ். துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோழ்து தோழர்கள் மு. திருமலைசாமி, கே. ஆர். ஜிஜாவுத்தீன். எ. பி. சனார்த்தனம் எம். எ., ஆகியோர் "இன்றைய திராவிடர்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

13-1-46ல் பெரிய பிரம்பூரில் திராவிடர்கழக ஆரம்பவிழாவில் தோழர்பி. வாதம்பாள் கொடியேற்றுவித்தார். தோழர் பி. எஸ். தங்கமுத்து பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். தோழர் மங்கையற்கரசியும் மற்றும் பலரும் பேசினர்.

14-1-46ல் வில்வாரணி திராவிடர் கழக முதலாவது ஆண்டு விழா தோழர் மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. ஆர். குப்புசாமி, க்ர. கோவிந்தன் பி. இ. எல்., புலவர் நன்னன் [illegible]

13-1-46ல் வடசென்னை மத்திய திராவிடர் கழக முதலாவது ஆண்டுவிழா, ஜெயராம் நாடார் மைதானத்தில் தோழர் எம். ஆர். பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. சி. என். அண்ணாதுரை, கே. அன்பழகன், பி. சனார்த்தனம், சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்.

சிவகங்கையில் 14-1-46 அன்று தாலூகா திராவிடர் கழக துவக்கவிழாவும், கட்டிட திறப்புவிழாவும் முறையே தோழர்கள் வே. நடராசன், ஆர். ராம சுப்பிரமணியன் இவர்களால் நடத்தப்பட்டது.

திருவாரூர் 14-1-46ல் தோழர் வி. ஜி. அரங்கராசு இல்லத்தில் நடந்த திராவிடர் கழக நிர்வாக கமிட்டிக் கூட்டத்தில் அநேக தீர்மானங்கள் நிறைவேறின.

கண்டியூரில் 20-1-46ல் தோழர் லேன்ஸ் நாயக் எ. ராஜரெத்தினம் தலைமையில் கூடிய திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் தோழர் வேதமுத்து தலைவராகக்கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அநேக தீர்மானங்கள் நிறைவேறின.

14-1-46ல் நாமக்கல்லில் நடந்த திராவிடர் கழக கூட்டத்தில வழக்கறிஞர் பி. முத்துசாமியை தலைவராகக் கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அநேக தீர்மானங்கள் நிறைவேறின.

30-12-45ல் புரசை திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் தோழர் சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் து. மு. பழனிசாமி, ஆரோக்கியதாஸ், தருமலிங்கம், இ. வி. ராஜன் ஆகியோர் பேசினர்.

வேலூர் திராவிடர் கழகக்கூட்டம் தோழர் மோகனம் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. என். அண்ணாதுரை சொற்பொழிவாற்றினார்.

27-12-45ல் தாராபுரம் திராவிடர் கழகத்திற்கு தோழர் வி. முத்துகிருஷ்ணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

சென்னை 35, 39, 40 டிவிஷன்களைக்கொண்ட மயிலை திராவிடர் கழகம் 23-12-45ல் நிறுவப்பட்டு தோழர் எம். கே. தங்கவேலு அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். தீபாவளி போன்ற மூடநம்பிக்கையும், சுயமரியாதை அற்றதும், ஆபாசமானதுமான பண்டிகைகள் கொண்டாடுவதை விட இப்படி தமிழ்த்திருநாள் என்று தமிழ் மக்கள் கூட்டுறவுக்கும், மகிழ்ச்சிக்கும், கொண்டாட்டத்துக்கும் அனுகூலமாகத் திருநாள்களை பரப்பவேண்டும். நமது பெண்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதையும் இருந்தாலும் ஒரு திருநாள் வேண்டி இருக்கிறதால் தீபாவளியையும், மாரி பண்டிகையையும் கொண்டாட ஆசைப்படுகிறார்கள் ஆதலால் தக்கதுசெய்ய வேண்டுகிறேன்.

23-11-45ல் கனியூர் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் தோழர் ம. சுப்பாநாயுடு தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாக உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

21-12-45ல் வளையாம்பட்டு திராவிடர் கழத்தில் தோழர் எம். நடேசன் தலைமையில் பெரியார் பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் எ. நல்லசாமி, எம். எ. சாமி முதலியோர் சொற்பெருக்காற்றினார்கள்.

16-12-45ல் கூரைநாடு திராவிடர் கழகத்திற்கு தோழர் ப. சுந்தரம் அவர்களை செயலாளராகக் கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

கரூர் திராவிடர் கழக 17-12-45 கூட்டத்தில் புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் கே. எஸ். தேவு, பண்டிதர் முத்துசாமி பிள்ளை ஆயோர் மறைவு குறித்து வருத்தந்தெரிவிக்கப்பட்டது. தோழர் பி. கே. அய்யர் சொற்பொழிவாற்றினார்.

திருச்சி வரகனேரி ஆனந்தபுரத்தில் வரகனேரி ஆனந்தபுரம் திராவிடர் கழகம் 21-12-45 தேதி நிறுவப்பட்டு, தோழர்கள் சித. சாம்பசிவம் தலைவராகவும், மு. நல்லுசாமி நிதி காப்பாளராகவும், த. ச. மணி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Edited, Printed, and Published by M. Karuppaswamy at the [illegible] [illegible], Erode.